**செய்தி வெளியீடு எண்: 310** **நாள் : 12.06.2013**

**மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் வருவாய்த்துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்கள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டம்**

வருவாய்த்துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் வறட்சி நிவாரணப் பணிகளின் செயல்பாடுகள் குறித்து அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்கள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. 'தோப்பு' என்.டி. வெங்கடாசலம் அவர்கள் தலைமையில் எழிலகம் வருவாய் கருத்தரங்க கூடத்தில் இன்று (12.06.2013) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வருவாய்த்துறையின் செயலர் திரு. ககன் தீப் சிங் பேடி, இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் முனைவர் த. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப., / முதன்மைச் செயலர் / நிலநிருவாக ஆணையர் முனைவர் திருமதி கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நிலச்சீர்திருத்தத் துறை முதன்மைச் செயலர் / ஆணையர் திருமதி ஜெயஸ்ரீ ரகுநந்தன் இ.ஆப., பேரிடர் மேலாண்மை கூடுதல் ஆணையர் திரு. ஆஷிஷ் சாட்டர்ஜி, இ.ஆ.ப., நிலச்சீர்திருத்த இயக்குநர் திரு. ஜெ. சந்திரகுமார் இ.ஆ.ப., மற்றும் வருவாய் நிருவாக இணை ஆணையர் முனைவர் மு.ஜெயராமன் இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

வருவாய் நிருவாகம் நிலநிருவாகம், நிலச்சீர்திருத்தம், ஆகிய துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்கள் அவற்றின் செயல்பாடுகள் மற்றும் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகள் குறித்தும் விரிவான ஆய்வினை மேற்கொண்டார்கள்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், தமது தலைமையுரையில், 'இந்தியாவில் பிற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டிடும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்துத் துறைகளும் தன்னிறைவு பெற்றிட வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தில் 'விஷன் 2023' என்கிற தொலை நோக்குத் திட்டத்தினை உருவாக்கி செயல்படுத்தி உள்ளார்கள்.

குறிப்பாக நமது வருவாய்த்துறையின் வரலாற்றில், இதுவரையில் இல்லாத அளவிற்கு அதிக அளவிளான திட்டங்களையும், அவற்றினை விரைந்து செயல்படுத்திட உரிய நிதியினையும் வழங்கியுள்ளார்கள். ஆண்டுக்கு ஒரு இலட்சம் வீட்டுமனைப் பட்டா, விரைவு பட்டா மாறுதல் திட்டம், புதிதாக உருவாக்கப் பட்டுள்ள 34 வருவாய் வட்டங்கள், 5,354 புதிய கிராம நிருவாக அலுவலர்கள் நியமனம், 5000 கிராம நிருவாக அலுவலக கட்டடங்களை புதுப்பிக்க ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு. வருவாய் ஆய்வாளர்கள் அலுவலகங்களின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட கூடுதல் நிதியுதவி, பணிகளை விரைந்து மேற்கொள்ள புதிய வாகனங்கள், திருப்பூர், தஞ்சாவூர், கடலூர் ஆகிய மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு ஒருங்கிணைந்த பெருந்திட்ட வளாகங்கள் என எண்ணற்ற அறிவிப்புகளையும், அவற்றினை விரைந்து செயல்படுத்திட உரிய நிதியினையும் வழங்கி, இத்திட்டங்களை எல்லாம் உரிய நேரத்தில் முடிக்கப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இந்தியாவிலேயே முதன்முறையாக, பயிர் இழப்பீட்டிற்காக மட்டும் ஏறத்தாழ 1,376.71 கோடி ரூபாய் உடனடி நிவாரண உதவித் தொகை வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். தவிர, பாதிக்கப்பட்டுள்ள விவசாயப் பெருமக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில், ஏறத்தழ 2,551.75 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களையும் அறிவித்துள்ளார்கள். போர்க்கால அடிப்படையில் நிவாணரப் பணிகள் முடுக்கி விடப்பட்டு, தற்பொழுது டெல்டா மாவட்டங்களைச் சார்ந்த 3,52,613 இலட்சம் விவசாயிகளுக்கு 524.25 கோடி ரூபாய் பயிர் இழப்பீட்டுத் தொகையானது, விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், டெல்டா அல்லாத வறட்சியால் பாதிக்கப்பட்டு 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டு பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச் சார்ந்த 17,94,432 விவசாயிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 835 கோடியே 21 இலட்சம் ரூபாயில், நாளது வரையில், 756 கோடியே 22 இலட்சம் ரூபாய் பயிர் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு16,03,691 விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள். ஏறத்தாழ 90 விழுக்காடு இழப்பிட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது எஞ்சியுள்ள 10 விழுக்காடு நிவாரண உதவித் தொகையினை விரைந்து வழங்கிட ஆவன செய்ய வேண்டுமாறு அலுவர்களைக் கேட்டுக் கொண்டார்.

ஆண்டுக்கு ஒரு இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை விஞ்சி, கடந்த இரண்டாண்டுகளில் 2.53 லட்சம் வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் 2 இலட்சம் வீட்டு மனைப் பட்டா வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 10,912 இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டு மாநிலம் முழுதும் நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ள 'விரைவு பட்டா மாறுதல் திட்டம்' இத்திட்டத்தின் கீழ் நாளது வரையில் 26,23,251 பட்டா மாறுதலுக்கான உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆக்கிரமணத்திலுள்ள அரசு நிலங்களை மீட்டு வேலியமைத்து பாதுகாக்கும் சிறப்புத் திட்டத்தின் கீழ், நாளது வரையில், 38.35 கோடி ரூபாய் மதிப்பிலான 108.13 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமணதாரர்களிடமிருந்து மீட்கப்பட்டு அவையாவும் வேலியிடப்பட்டுள்ளன.

மிகவும் குறுகிய காலத்தில் அறிமுகம் செய்யப்பட்டு, மக்களிடம் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ள 'அம்மா' திட்டத்தின் கீழ், கடந்த மே மாதம் வரையில், 7,52,992 மனுக்களின் மீது தீர்வு காணப்பட்டுள்ளது மகத்தான சாதனையாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தினை வெகுவாக பாராட்டியுள்ளதோடு, அவ்வப்போது இது பற்றி ஆர்வமுடனும் கேட்டறிந்து வருகிறார்கள். இத்திட்டத்தினைப்பொறுத்த மட்டில், இராமநாதபுரம், திருவாரூர் மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் 93 விழுக்காடு மனுக்களின் மீது தீர்வு காணப்பட்டுள்ளது பாரட்டுக்குரியது என்று அமைச்சர் குறிப்பிட்டார்கள்.

'முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டமும் மிகவும் உன்னதமான திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் இதுவரையில், 1,68,08,359 நபர்கள் மூல உறுப்பினர்களாகவும், 1,25,78,160 நபர்கள் உறுப்பினர்கள் சார்ந்தவர்களாக ஆக மொத்தம் 2,93,86,519 நபர்கள் கணக்கெடுக்கப் பட்டுள்ளார்கள். இவர்களுக்கு எல்காட் நிறுவத்தின் மூலம் அடையாள அட்டை வழங்கிடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் கல்வி உதவி , திருமண உதவி, இயற்கை மரண உதவி, விபத்து நிவாரணம், ஈமச்சடங்கு செலவு, முதியோர் ஓய்வூதியம், புற்றுநோய், காசநோய், சிறுநீரக நோய் மற்றும் கொடிய நோயினால் பாதிக்கப்பட்டு தற்காலிக உடல் திறனற்ற காலத்திற்கான ஓய்வூதியம், எச்ஐவி நோயினால் உயிரிழந்த உறுப்பினர்களின் அனாதை குழந்தைகளுக்கு மாத உதவி போன்ற உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று நாளதுவரையில், 20,60,111 நபர்களுக்கு முதியோர் ஓய்வூதியமும், 6,22,198 நபர்களுக்கு பல்வேறு உதவித் தொகையாக 1,779 கோடியே 90 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது மகத்தான சாதனை என்று பெருமையோடு குறிப்பிட்டார்கள்.

'அரசின் நலத்திட்டங்களை செல்படுத்துவதிலும் கட்டுக் கோப்பான சமுதாய முன்னேற்றம் மற்றும் அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதிலும், இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும்போது மக்களை நாடிச் சென்று உதவிக் கரம் நீட்டுவதிலும், பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு நிலைகளில் மக்களுடன் இணைத் செயல்படுவதிலும், வருவாய்த்துறை முக்கிய பங்காற்றுவதுடன், நிருவாகத்தின் முதுகெலும்பாக தொடர்ந்து விளங்கி வருவதாக' மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் நமது வருவாய்த்துறையினைப்பற்றி பெருமிதத்தோடு குறிப்பிட்டுள்ளதை நாம் அனைவரும் நினைவில் கொண்டு, பணியாற்றி வருவாய்த்துறைக்கு பெருமையினைத் தேடித்தர வேண்டும் என்றும் கேட்டு கொண்டார்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**